**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI**

CC.No.287/2017 தேதி 30.08.2024

PW3 / LW5 – திரு. செல்வராஜ், த/பெ. ரெங்கநாதன்

**(எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் அவர்களால் குவிமுச பிரிவு 311ன் கீழ் சாட்சியை திரும்ப அழைக்க மனுதாக்கல் செய்து அது Crmp 2674/2024 தேதி 12.08.2024 அன்று அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.)**

**(சாட்சியிடம் சத்தியப்பிரமானம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் திரு. முரளிதரன், bench clerk Gr-3 (i/c) என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**

**<u>எதிரி ஆஜர்</u>**

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் ஊரில் எந்த பொறுப்பிலும் இல்லை. அசா1 மற்றும் 1வது எதிரி சிங்கப்பூரில் பழகியதையும், ஊரில் பழகியதையும் நான் நேரடியாக பார்க்கவில்லை. அசா1 சொல்லிதான் தெரியும் என்றால் சிங்கப்பூரில் பழகியதை நான் நேரில் பார்த்ததில்லை. ஊரில் நான் நேராக பார்த்துள்ளேன். போலீசார் விசாரணையின் போது நேராக தெரியும் என்ற விபரத்தை சொன்னேனா என்றால் சொன்னேன். அசா1ம், 1வது எதிரியும் பழகியதை நேரடியாக நான் என்ன பார்த்தேன் என்றால் அவர்கள் இருவரும் கணவன் மனைவியாக இருந்ததை நான் நேராக பார்த்துள்ளேன். எந்த வருடம் என்றால் 2011 ஆம் வருடத்தில் ஜனவரியில் இருந்து எங்கள் ஊரில் தான் இருந்தார்கள். அதன் பிறகு இரண்டு பேரும் சேர்ந்து சிங்கப்பூருக்கு போனார்கள் என்றால் ஆமாம். இந்த விபரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். என் வீடும், அசா1 வீடும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 200 மீட்டர் பக்கம் தான். அசா1 வீட்டு பக்கத்தில் மாரிமுத்து, நடேசன், பொன்னம்மாள், வாசுதேவன், கல்யாணசுந்தரம் ஆகியோர் வீடுகள் உள்ளது என்றால் ஆமாம். அசா1னிடம் 1வது எதிரியை கல்யாணம் செய்து கொள்ளவேண்டும் இப்படி இருக்கக்கூடாது என்று பெரியவர் என்ற முறையில் நான் சொன்னேனா என்றால் இல்லை. 2011 முதல் அசா1ம், 1ம் எதிரியும் என் ஊரில் ஒன்றாக இருந்தார்கள் என்று நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் இல்லை. எனது விசாரணையில் ஒத்துக்கொள்ளவில்லை என்றால் வீட்டை அடித்து நொறுக்கிவிடுவோம் என்று சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். அதை போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். அசா1 புகார் கொடுக்க சென்றபோது நானும் உடன் சென்றேன் என்றால் ஆமாம். நான், வெங்கடேசன், பக்கிரிசாமி, சிவமணி எல்லோரும் அசா1வுடன் புகார் கொடுக்க சென்றோம் என்றால் ஆமாம். என் பெயர், விலாசத்தை போலீசார் கேட்டு பெற்றுக்கொண்டார்களா என்றால்

இல்லை. நான் பக்கிரிசாமி, அசா1, 1 வது எதிரி வீட்டிற்கு சென்று திருமணம் செய்து கொள்ளவேண்டும் என்று கேட்டோம். ஆனால் வரதட்சணை கொடுத்தால் தான் கல்யாணம் செய்து கொள்வேன் என்று சொன்னதால் உடனடியாக காவல்நிலையம் சென்று இது சம்மந்தமாக புகார் கொடுத்தோமா என்றால் இல்லை. போலீஸ் 100 க்கு போன் செய்தும் கூட புகார் கொடுக்கவில்லை என்றால் ஆமாம். எங்கள் ஊரில் இருந்து தீயத்தூருக்கு எவ்வளவு தூரம் என்றால் சுமார் 60 கி.மீ இருக்கும். அங்கு சென்று வந்த பிறகும் எங்கள் ஊரிலும் புகார் கொடுக்கவில்லை என்றால் ஆமாம். எங்கள் ஊரில் வந்து மிரட்டியதாக சொல்லியுள்ளோம் அப்போதும் புகார் கொடுக்கவில்லை என்றால் 12.10.2014 ஆம் தேதி புகார் கொடுத்தோம். இது சம்மந்தமாக போலீசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் மறுநாள் விசாரித்தார்கள். போலீசர் என்னிடம் கையெழுத்து வாங்கினார்களா என்றால் இல்லை. எங்கள் ஊர் தலைவர் பெயர் அபுல்காசன் ஆவார். அவர் இந்த விசயத்தில் தலையிடவில்லை என்றால் ஆமாம். நான் சொன்னமாதிரி எந்த சம்பவமும் நடக்கவில்லை, அசா1 ம் நானும் ஒரே சமூகத்தை சேர்ந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை.

**மறு விசாரணை - இல்லை**

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

ஒம்/- எஸ்.கவிபிரியா
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI**

| | | |
|---|---|---|
| Case Number | | CC No.287/2017 |
| Deposition of witness | | PW-8/LW-7 |
| Name | | பக்கிரிசாமி |
| Father’s/Husband Name | | ராமசாமி |
| Village | | பாவாஜிகோட்டை |
| Taluk | | பட்டுக்கோட்டை |
| Caste | | - |
| Calling | | - |
| Religion | | - |
| Age | | 65 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 30th day of August 2024

**(சாட்சியிடம் சத்தியப்பிரமானம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் செல்வி.கு.பரமேஸ்வரி, bench clerk Gr-3 என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**

**எதிரி ஆஜர் U/s.317 Crpc மனு கொடுக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் பாவாஜிக்கோட்டையில்குடியிருந்து வருகிறேன். விவசாய வேலை பார்த்து வருகிறேன். அசா1 ஐ தெரியும். எதிரிகளை தெரியும். எங்கள் ஊரைச்சேர்ந்தவர்கள். எதிரி சரண்யாவை தெரியும். கடந்த 2011 ல் சிங்கப்பூரில் இருந்து அசா1 பாவாஜிக்கோட்டைக்கு வந்தார். 1 வது எதிரி பாவாஜிக்கோட்டைக்கு 2012 ல் ஜனவரி மாதத்தில் வந்தார். 1 வது எதிரியும், அசா1 ம் ஒரே வீட்டில் இருந்தார்கள். நாங்கள் போய் கேட்டோம். பூ வைத்திருக்கோம் என்று சொன்னாங்க. 1 வது எதிரி நான் தான் அசா1 ஐ கட்டிக்கப்போகிறேன் என்று சொன்னார். அதன் பிறகு 5 வருடங்கள் கழித்து 2016 ல் அசா1 ம், அவரது அம்மாவும் கல்யாணம் செய்து கொள்ளாமல் போயிட்டார் என்று எங்களுகிட்ட சொன்னாங்க. செல்வம், சிவமணி, என்னிடமும் ஊரில் உள்ளவர்களிடம் சொன்னார். நாங்க போய் தேடிப்பார்த்தோம். 1 வது எதிரியின்

அக்காள் வீட்டிற்கு போய் பார்த்தோம். அங்க 1வது எதிரி இருந்தார். அப்போது அவருடன் எதிரிகள் அடைக்கலம், ராஜம் இருந்தார்கள். நாங்கள் கேட்டபோது 20பவுன் நகை, கார், 5லட்சம் பணம் கொடுத்தால் கல்யாணம் பன்னிக்கிறேன் என 1வது எதிரி சொன்னார். கொடுக்கவில்லை என்றால் முடியாது என்று சொல்லிவிட்டார். நேராக வந்து அசா1னிடம் சொன்னோம். சரண்யா டீக்கடை முக்கில் இருந்த போது எங்களை பார்த்து தாறுமாறாக பேசுச்சு. பின்னர் ஒரு வாரம் கழித்து அசா1ன் வீட்டில் வைத்து எதிரிகள் தகராறு செய்தார்கள். அசா1 இது சம்மந்தமாக புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**</u>

நான் முதல் விசாரணையில் 1வது எதிரி **“2012ல் ஜனவரி மாதத்தில் வந்தார். 1வது எதிரியும், அசா1ம் ஒரே வீட்டில் இருந்தார்கள். நாங்கள் போய் கேட்டோம். பூ வைத்திருக்கோம் என்று சொன்னாங்க. 1வது எதிரி நான் தான் அசா1ஐ கட்டிக்கப்போகிறேன் என்று சொன்னார்**" என்பதை போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் ஆமாம். 2011 முதல் 2016வரை 5வருடமும் 1வது எதிரி அசா1ன் வீட்டில் தான் இருந்தாரா என்றால் ஆமாம். அடைக்கலம், ராஜம் நாங்கள் சென்று கேட்டபோது இருந்தார்கள் என்ற விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். என்னை திட்டியதாக சொல்லும் சரண்யா அன்று ஜிப்மர் மருத்துவமனையில் வேலை பார்த்தார் என்று இந்த வழக்கில் விடுவிக்கப்பட்டார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. ஒருவாரம் கழித்து சண்டை போட்டுக்கொண்டார்கள் அது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் ஆமாம். சம்மந்தமாக அன்றையதினமே புகார் கொடுத்தார்கள் என்றால் ஆமாம். காவல்நிலையத்திற்கு நானும், செல்வம், சிவமணியும் போனோம் என்றால் ஆமாம். போலீசர் என்னை விசாரித்து விலாசத்தை கேட்டுக்கொண்டார்கள் என்றால் ஆமாம். போலீசார் யாரிடமாவது கையெழுத்து வாங்கினார்களா என்றால் இல்லை. அதன் பிறகு விசாரித்தார்களா என்றால் 3நாள் கழித்து விசாரித்தார்கள். அசா1 என் ஊரைச்சேர்ந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம்

அளிக்கிறேன் என்றால் இல்லை.

**<u>மறு விசாரணை இல்லை</u>**

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

ஒம்/- எஸ்.கவிபிரியா
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை.